**.மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
**அசல் வழக்கு எண். 74/2018**

PW2 – பாலு, த/பெ. முருகவேல்
நாள்–27.03.2024

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை :**

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல அழைப்பானை வரவில்லை என்றால் சரிதான். வாதி தான் என்னை அழைத்து வந்தார் என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களை வாதிதான் சொன்றார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் உயிருடன் தான் உள்ளார். தாவா சொத்து ஆலங்காட்டில் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கும் ஆலங்காட்டிற்கும் உள்ள துாரம் எவ்வளவு என்றால் சுமார் 2 கிலோ மீட்டர் இருக்கும். எனது நிலம் வாய்க்காலுக்கு தெற்கில் உள்ளது என்றால் சரிதான். எனது சொத்தை எனது தகப்பனார் தான் சாகுபடி செய்து வருகிறாரர் என்றால் ஏற்கனவே செய்து வந்தார் தற்சமயம் நான்தான் சாகுபடி செய்து வருகிறேன். எனது சொத்தை நான்தான் சாகுபடி செய்து வருவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

எனது நிலம் கடந்த 6, 7 வருடங்களாக சாகுபடி செய்யவில்லை என்றால் சரியல்ல. எங்கள் சொத்து யார் பெயரில் உள்ளது என்றால் எனது தாத்தா பெயரில் உள்ளது. தாவா சொத்து வாதியின் பெயரில் உள்ளது என்பதற்கு பதிவு பெற்ற ஆவணம் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். வாதி ஏதேனும் பதிவு பெற்ற ஆவணம் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளாரா என்ற விபரம் நான் தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. தாவா சொதின் புல எண் தெரியுமா என்றால் புல எண்.72 ஆகும். தாவா சொத்தின் என்ன வகைபாடு என்றால் திடலாகும். வாதி இந்த வழக்கை சொத்தையும் சேர்த்து பாகபிரிவினை கோரி

சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கின் விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எங்கள் குடும்பத்தில் எங்களுக்குள் பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கு அருகில் உள்ள சொத்து எங்கள் குடும்ப சொத்து என்றால் சரிதான். தாவா சொதின் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்திற்கு தெற்கில் வாய்க்கால், மேற்கிலும், கிழக்கிலும் காசிநாதன் நிலம், வடக்கில் சரஸ்வதி நிலம் உள்ளது. என்மீது எனது கிராமத்தில் மோட்டார் திருடியதாக பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவாசொத்தை வாதி 25 ஆண்டுகளாக அனுபவத்தில் இருந்து வருவதாக பொய் சொல்கிறேன் என்றும் வாதி எனது நண்பர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதிறகு இனங்க அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் 1–ம் பிரதிவாதி சவுக்கு சாகுடி செய்திருந்தார் என்றால் சரியல்ல. வாதிதான் சவுக்கு சாகுபடி செய்திருந்தார். எனது சாட்சி ஏற்றுக்கொள்ள தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**